**<u>அசல் வழக்கு எண். 14/2021</u>**

**<u>02.07.2026</u>**

**பெயர் – ராமகிருஷ்ணன் த/பெ.குருசாமி** (PW3)

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(1) நான் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் பெறவில்லை. வழக்கின் வாதி எனது அப்பா. அவர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். நான் பன்னிரெண்டாம் வகுப்பு படித்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் வாதி குருசாமி சொல்லி தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். வாதி என்ன பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியும். தாவாச் சொத்தின் காலை எண் மற்றும் விஸ்தீர்ணம் தெரியாது என்றால் சரியல்ல நானும் அனுபவத்தில் உள்ளேன். காலை எண் 593. 1 ஏக்கர் 22 செண்ட் விஸ்தீர்ணம். பிரதிவாதிகள் பூமி குருசாமி பூமிக்கு வடபுறம் உள்ளது. குருசாமி பூமிக்கு வடபுறம் எங்களுடைய பூமியும், தென்புறம் பஞ்சாயத்து ரோடும், மேற்கே எனது பெரியப்பா பூமியும், கிழக்கே கனகராஜின் சகோதரர்கள் பூமியும் உள்ளது.

(2) பிரதிவாதிகள் பூமிக்கு மேற்கு புறம் வண்டிப்பாதை உள்ளது என்றால் சரியல்ல. அந்த வண்டிப்பாதையை தான் பிரதிவாதிகள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பூமிக்கு மேற்கு புறம் வண்டிப்பாதை உள்ளது என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி எனது அப்பா என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.02 17:35:24 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்